**THE LABOUR COURT, SALEM**

**C.P.Nos.48 & 49 of 2017**

**<u>18.07.2023</u>**

**RW2 – சந்திரசேகரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

பணி ஓய்வு பெற்றபின் சாட்சியம் அளிக்க தனியாக அதிகார கடிதம் கொடுக்கவில்லை. மனுவில் கண்ட சங்கதிகள் எனக்கு தெரியும். மனுதாரர் 04.05.1987 ல் பணிக்கு சேர்ந்தார். அவரின் பணி ஓய்வு தேதி 30.06.2015. அவர் பணியில் இருந்தபோதே ஒழுங்கு நடவடிக்கை அடிப்படையில் 29.12.1992 ல் துறைவிசாரணை அறிக்கை அடிப்படையில் அவரை பணிநீக்கம் செய்தோம். அந்த பணிநீக்கத்தை எதிர்த்து மனுதாரர் தொழில் தாவா எண் 586/2004 ல் தாக்கல் செய்தார். அது 12.02.2009 ல் தீர்ப்பு ஆகியது.

அதில் பின் சம்பளம் இல்லாமல் அவர் மீண்டும் பணிக்கு வர உத்தரவு வழங்கியது. 25.05.2010 ல் மீண்டும் அவருக்கு பணி வழங்கப்பட்டது. உத்தரவு தேதி 12.02.2009 லிருந்து 24.05.2010 வரை மனுதாரரை நாங்கள் பணிக்கு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. உத்தரவு கொடுத்தோம் அவர் சேரவில்லை. அதற்கான அத்தாட்சியை நாங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

25.05.2010 முதல் மனுதாரர் பணிஓய்வு பெற்ற தேதி வரை முறையான சம்பளம் கொடுக்கவில்லை என்றும், குறைவாகத்தான் சம்பளம் கொடுக்கப்பட்டது என்றும், அவர் வருங்கால வைப்பு நிதி மற்றும் சம்பளம் குறைவாக அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் மனு பக்கம் 6 முதல் 29 வரை கொடுக்கப்பட்டுள்ள

தனித்தனி இடங்களின் கணக்கீட்டை மறுத்து எவ்விடத்திலும் எங்கள் சாட்சி வாக்குமூலத்தை நாங்கள் சொல்லவில்லை. கணக்கீட்டு மனு எண்.49/17 ல் வருங்கால வைப்பு நிதி குறைபாடு உள்ளது என்றும், அதற்கான கோரிக்கை விடுத்துள்ளது எங்களுக்கு தெரியும். மனுதாரர் ஓய்வு பெறும்போது அவருக்கு கிடைக்கவேண்டிய அடிப்படை சம்பளம் ரூ.14,520/- என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எந்த மாத சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை தொகை வழங்கப்பட்டது என்றால் ரூ.9,600/- மாத சம்பள அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

அதன் அடிப்படையில் ரூ.1,12,071/- பணிக்கொடை தொகை வழங்கப்பட்டது. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு எதிராக பணிக்கொடை கேட்டு வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும். நிர்வாக தரப்பில் அவ்வழக்கில் பதில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அந்த பணிக்கொடை வழக்கு எண்.217/2015 தீர்ப்பில் பணிக்கொடைக்கு மனுதாரரின் பணிக்காலமாக 28 ஆண்டுகள் கணக்கிடப்பட்டது என்று சொல்லி அதற்கான ஆவணம் Ex.P11 ஐ சாட்சியிடம் காட்டி சாட்சி அதைப்பார்த்து அந்த உத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு 28 ஆண்டு பணியாற்றியுள்ளதால் அவர் முழு ஓய்வூதிய தொகை பெற தகுதியுடையவர் என்றால் சரியல்ல.

கணக்கீட்டு எண். 49/2017 பக்கம் 11 முதல் 33 வரை கொடுக்கப்பட்டுள்ள கணக்கீட்டு விபரம் குறிப்பிட்டு எங்கள் கணக்கில் இல்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டு என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு அவர் பணிபுரிந்த மொத்த 68 ஆண்டு காலம் கணக்கீட்டு

பணிக்கொடை வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனவே அதன் அடிப்படையில் ஓய்வுதியத்திற்கும் 28 ஆண்டு பணிக்காலமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகத்திற்கு இடையே ஏற்படும் சம்பள மற்றும் இதர சலுகைக்கான ஒப்பந்த அடிப்படையில்தான் தொழிலாளர்களின் சம்பள மற்றும் இதர சலுகைகள் நிர்ணயிக்கப்படுகிறது. மனுதாரர் ஓய்வு பெறும்போது இருந்த ஊதிய ஒப்பந்த அடிப்படையில்தான் Ex.P29 அடிப்படையில் இந்த கணக்கீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. அந்த ஊதிய ஒப்பந்த அடிப்படையில் மனுதாரர் பணிஓய்வு பெற்ற 30.06.2015 அன்று கிடைக்கக்கூடிய ரூ.14,520/- தரஊதியம் ரூ.4300/- மொத்த மாத சம்பளமாக ரூ.18,820/- ஓய்வுதிய கணக்கீட்டுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால், சரியல்ல.

Ex.P29 01.09.2013 முதல் 31.08.2016 வரை 3 ஆண்டு காலகட்டத்திற்கு அமுலில் இருக்கும், அந்த இடைப்பட்ட காலத்தில்தான் மனுதாரர் பணி ஓய்வு பெற்றார். மனுதாரருக்கு ஜுலை 2015 லிருந்து ஜுன் 2017 வரை ஓய்வூதியம் கொடுக்காததால் ஓய்வுதிய தொகை ரூ.4,83,006/- கேட்டுள்ளார். இன்றைய தேதி வரை ஓய்வூதியம் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. தொழிலாளிக்கு ஓய்வுதிய சேமநலநிதி ரூ.13,500/- கொடுத்தாகிவிட்டது. மீத தொகை 4,500/- நிலுவையில் உள்ளது.

அரசு உத்தரவின் கீழ் பல தொழிலாளிக்கு சேமநலநிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதி தொகை கொடுக்கப்பட்டதற்கான

ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுவில் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Sd (Dr.P. Murugan),
Presiding Officer,
Labour Court, Salem.